இணைப்பு.

(114 ஆம் பக்கத்தில் இனம் 3-க்கான அடிக்குறிப்பைக் காண்க.)

1984 ஆம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் பெய்த மழையின் காரணமாக **வைகை அணையில் தண்ணீர் வரவு அதிகரித்து 7—3—84-ம்** தேதி காலை எட்டு **மணியளவில் 68 அடிக்குத் தண்ணீர் மட்டம் உயர்ந்துவிட்டது.** மேற்படி அணையின் உச்ச மட்டம் 71 அடி ஆகும். பெரியகுளம், உத்தமபாளையம் ஆகிய வட்டங்களில் அதிகமான அளவு பெய்த மழையின் காரணத்தால் தண்ணீர் வரவு அதிகரித்துக்கொண்டு வந்தது. அதன் காரணமாக 7—3—84-ம் தேதி பகல் 12 மணிக்கு 68,000 கன அடி தண்ணீர் வைகை அணைக்கட்டிலிருந்து வெளியேற்றப்பட்டது. இந்த நடவடிக்கையை முன் எச்சரிக்கையாகவே மனதிற்கொண்டு, 6—3—1984 இரவு முதல் வைகை ஆற்றின் ஓரங்களிலுள்ள மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டது. மேலும் ஆற்றுப்படுகைகளிலும், ஆற்றின் கரைகளின் தாழ்வான பகுதிகளிலும் குடிசைகள் கட்டி, வாழ்ந்து வந்த மக்களை அப்புறப்படுத்த நடவடிக்கையும் முன்னதாக எடுக்கப்பட்டது. 7—3—1984 ஆம் தேதி பகல் 1-30 மணியளவில் வைகை அணையிலிருந்து வெளியேற்றப்பட்ட தண்ணீர் மதுரை நகர் மூலமாக வைகை ஆற்றில் கடந்து சென்றது. அன்று இரவு ஏழு மணியளவில் வெள்ளத்தின் வேகமும் அளவு குறைந்து 68000 கன அடியிலிருந்து 6000 கன அடிக்குக் குறைந்துவிட்டது.

7—3—84-ம் தேதி மதுரை வைகை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் கீழ்க்கண்ட இடங்களில் சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இவர்கள் காவல் துறையினர் மூலமாகவும், தண்டோரா மூலமாகவும் முன்கூட்டியே எச்சரிக்கை கொடுக்கப்பட்டு, மேடானப் பகுதிக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

இடம்	பாதிக்கப்பட்ட குடும்பங்கள்
1. ஆரப்பாளையம் (மேல்பாலத்தையொட்டி)	30
2. தத்தனேரி, கைலாசபுரம் பாரதி நகர், செல்லூர் பகுதி	100
3. புட்டுத்தோப்பு	100
4. ஆழ்வார்புரம்	150
5. குருவிக்காரன் சாலை	100
6. வைகை காலனி	96
7. சிக்கந்தர்புரம்	10
8. வண்டியூர் பகுதி	5
மொத்தம்	591

1984 மார்ச் 14]

வெள்ளத்தில் சலவைத் தொழிலாளர் உயிருக்கோ, உடமைகளுக்கோ சேதம் ஏதும் ஏற்படவில்லை. தங்களுடைய உடமைகளுடன் மேடானதும், பாது காப்பானதுமான இடங்களில் தற்பொழுது இருந்து வருகிறார்கள். பாதிக்கப் பட்டுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு நிவாரணங்கள் செய்யப்பட்டும், மற்றும் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டும் வருகின்றன. உடனடி நிவாரணமாக குடிசை மானியம் ரூ. 200, 5 கிலோ அரிசி மற்றும் வேட்டி. சேலைகளும் பாதிக்கப்பட்டுள்ள எல்லாக் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

வைகை ஆற்றில் உரைக் கிணறு அல்லது ஊற்றுக் கிணறுகள் ஆற்றுப் படுகைகளில் ஏற்படுத்தி சலவைத் தொழிலாளர்கள் உபயோகப்படுத்தி வந்தார்கள். அவைகளுக்கு சேதமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவைகள் தற்போது ஆற்று வெள்ளத்தில் மூழ்கி உள்ளதால், சேத மதிப்பை ஆற்று நீர் குறைந்த பின்னர்தான் மதிப்பிட இயலும்.

சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS